## 29.23 மக்கள் நலப்பணியாளர்களுக்கு கூடுதல் பொறுப்புகள்

ஊரக வளர்ச்சி (மதி1) துறை

அரசாணை (நிலை) எண்.126 நாள் : 16.05.2000

படிக்க :

(1). அரசாணை (நிலை) எண்.50, ஊரக வளர்ச்சி, நாள் 24.02.1997
(2). அரசாணை (நிலை) எண்.277, ஊரக வளர்ச்சி, நாள் 10.09.1997
(3). அரசுக் கடிதம் (நிலை) எண்.250, ஊரக வளர்ச்சி, நாள் 24.11.1998
(4). அரசாணை (நிலை) எண்.30, ஊரக வளர்ச்சி (மதி1) துறை, நாள் 09.02.1999
(5). அரசாணை (நிலை) எண்.45, ஊரக வளர்ச்சி (மதி1) துறை, நாள் 09.03.1999
(6). அரசாணை (நிலை) எண்.79, ஊரக வளர்ச்சி (மதி1) துறை, நாள் 26.04.1999
(7). அரசாணை (2டி) எண்.149, ஊரக வளர்ச்சி , நாள் 09.07.1999
(8). ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடிதம் ந.க.27094/ஈ1/99, நாள் 06.04.2000.

**ஆணை**

கிராம ஊராட்சிகளின் செயல்பாட்டை மேம்படுத்தும் வகையில் அவைகளின் பணியமைப்பை நிதிநிலைக்கு ஏற்ப சீரமைப்பது குறித்து ஆய்வு செய்ய, படிக்கப்பட்டவை ஏழில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணைப்படி அமைக்கப்பட்ட குழு, மக்கள் நலப் பணியாளர்களுக்கு அரசு நிதியிலிருந்து ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் மூலம் தற்பொழுது மதிப்பூதியம் வழங்கப்பட்டு வருகிறது என்றும், கிராம ஊராட்சித் தலைவர்களுக்கும் மக்கள் நலப் பணியாளர்களுக்கும் பணி ரீதியாக நெருங்கிய தொடர்பு தற்போது இல்லாமல் உள்ளது என்றும், மக்கள் நலப் பணியாளர்களை கிராம ஊராட்சிகளுக்கும், கிராம ஊராட்சிகள் நிர்வாகத்தை கண்காணிக்கும் வட்டார வளர்ச்சி அலுவலருக்கும் இடையே ஒரு தொடர்பாக மட்டுமன்றி, கிராம ஊராட்சிகளின் களப்பணிகளுக்காகவும் முழுமையாக பயன்படுத்த வேண்டியது அவசியம் என்றும் தெரிவித்து, கீழ்க்கண்டவாறு பரிந்துரைத்துள்ளது.

**பரிந்துரை எண்.6**

தற்போதுள்ள மக்கள் நலப் பணியாளர்கள் ஊராட்சி ஒன்றியத்தின் ஊதியம் பெற்றுவரும் நிலையை மாற்றி, அரசு வழங்கும் மக்கள் நலப் பணியாளர்களுக்கான ஊதியத்தை, ஊராட்சி தலைவர்கள் மூலம் வழங்கவும், அடிப்படை வசதிகள் செயல்பாடு குறித்து ஊராட்சித் தலைவர்களுக்கு தகவல் தெரிவிக்கவும், ஊராட்சி ஒன்றிய ஆணையரால் அவ்வப்போது கோரப்படும் புள்ளி விவரங்களையும், கால முறை அறிக்கைகளையும், ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு வழங்கவும் ஏற்கனவே நிர்ணயித்த பொறுப்பை உறுதி செய்து அரசு ஆணையிடலாமென இக்குழு பரிந்துரை செய்கிறது. இவ்வாறாக மக்கள் நலப்பணியாளர்கள், வட்டார வளர்ச்சி அலுவலரின் (வட்டார ஊராட்சி) நிர்வாக கட்டுப்பாட்டின் கீழும், ஊராட்சியின் விரிவாக்கப் பணிகளில், ஊராட்சித் தலைவரின் அன்றாட கண்காணிப்பிலும் பணிபுரிவார்கள் இந்த ஏற்பாட்டின் மூலம் ஊராட்சி அலுவலகத்தை கவனிக்க முழுநேர ஊராட்சி உதவியாளரும், களப்பணிகளை கவனிக்க மக்கள் நலப் பணியாளருமாக இரு பணியாளர்கள் முறையாக பணிசெய்யும் ஏற்பாட்டினை, ஊராட்சியில் நடைமுறைக்கு கொண்டு வரலாம். மேலும் ஊராட்சி அலுவலகம் ஏனைய அரசு / உள்ளாட்சி நிறுவனங்களைப் போல முழு நேர அலுவலகமாக இயங்கவும், இதன் மூலம் பொதுமக்கள் தங்களின் கோரிக்கைகளை உடனுக்குடன் தெரிவிக்கவும்/ மக்கள் நலப்பணியாளர்கள் மூலம் தெரிந்து கொள்ளவும், வரி போன்ற ஊராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களை அலுவலக நேரத்தில் செலுத்தவும் இதன் மூலம் வழிவகை ஏற்படுகிறது.

2. மேற்கண்ட பரிந்துரையை, அரசு நன்கு ஆய்வு செய்தபின் ஏற்க முடிவு செய்துள்ளது. அதன்படி, கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகின்றது

(அ). தற்பொழுது மக்கள் நலப் பணியாளர்களுக்கு ஊராட்சி ஒன்றியத்தில் மதிப்பூதியம் வழங்கப்பட்டுவரும் முறையை மாற்றி, இனிமேல் அவர்களுக்கு சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகள் மூலம் மதிப்பூதியம் வழங்க வேண்டும் என்று ஆணையிடப்படுகின்றது.

(ஆ). வட்டார வளர்ச்சி அலுவலரின் (வட்டார ஊராட்சி) நிர்வாக கட்டுப்பாட்டின் கீழும், சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியின் கண்காணிப்பிலும், அவர்கள் பணியாற்ற வேண்டும் என்று அரசு ஆணையிடுகின்றது.

(இ). படிக்கப்பட்டவை மூன்றில் குறிப்பிட்டுள்ள அரசாணையில் ஏற்கனவே ஆணையிட்டுள்ளபடி, கிராம ஊராட்சிகளின் செயல்பாட்டை கண்காணிக்கும் வட்டார வளர்ச்சி அலுவலருக்கும் கிராம

ஊராட்சிகளுக்கும் இடையே ஒரு தகவல் தொடர்பாளராகவும், சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியின் களப்பணியாளராகவும் மக்கள் நலப் பணியாளர்கள் செயல்பட வேண்டுமென்று அரசு ஆணையிடுகின்றது.

(ஈ). ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட பணிகளுடன் கிராம ஊராட்சிகளின் அடிப்படை வசதிகள் பராமரிப்புப் பணிகளை மேற்பார்வையிட்டு, அடிப்படை வசதிகளின் செயல்பாடு, திட்டப்பணிகளின் முன்னேற்றம்,கிராம மக்கள் தெரிவிக்கும் குறைகள் / கோரிக்கைகள் போன்றவற்றை உடனுக்குடன் ஊராட்சித் தலைவருக்கும், வட்டார வளர்ச்சி அலுவலருக்கும் மக்கள் நலப்பணியாளர்கள் தெரிவிக்க வேண்டும். இவர்கள், கிராம ஊராட்சி நிர்வாகம் தொடர்பாக ஊராட்சி அளிக்கும் இதர களப்பணிகளையும் செய்ய வேண்டும்.

(உ). கிராம ஊராட்சிகளிடமிருந்து வட்டார வளர்ச்சி அலுவலர்களால் அவ்வப்பொழுது கோரப்படும் புள்ளி விபரங்கள், காலமுறை அறிக்கைகள் மற்றும் இதர தகவல்களை மக்கள் நலப் பணியாளர்கள் பெற்று உடனுக்குடன் அளிக்க வேண்டும்.

(ஊ). மக்கள் நலப் பணியாளர்களின் மதிப்பூதியத்திற்கென அரசால் அனுமதிக்கப்பட்டுள்ள மானியம் மாவட்ட ஆட்சியர்கள் மூலம் சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்படும்.

3. இந்த அரசாணையின் நகலை அனைத்து கிராம ஊராட்சித் தலைவர்கள், உதவி இயக்குநர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு உடனடியாக அனுப்புமாறு மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

4. இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.எண்.1370/FS/P/2000, நாள் 03.05.2000—ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரேமஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்